மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது. பேரவை மீண்டும் நாளைக் (11—9—1991) காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–54 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

39. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணையை ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 27—7—1990 ஆம் நாளிட்ட 340ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தில் 320(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

40. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணையை ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 22—4—91 ஆம் நாளிட்ட 147ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசமைப்பு சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

41. தமிழ்நாடு 1954ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணையை ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 23—4—1991 ஆம் நாளிட்ட 154ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின்கீழ் பேரைவைமுன் வைக்கப் பெற்றது.)

42. அத்தியாவசியப் பண்டங்களின் கொள்முதல், இருப்பு வைத்தல், மற்றும் பகிர்ந்தளித்தலில் ஈடுபட்டுள்ள பொதுக் கூட்டுறவுச் சங்கங்களை 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் முதல் அட்டவணையில் சேர்ப்பது குறித்து தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 10—1—1991ஆம் நாளிட்ட 52ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 14/1947) 40 பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

43. தமிழ்நாடு 1988ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 29—6—1990ஆம் நாளிட்ட 637ஆம் எண் அரசாணையில் வெளிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப்பெற்றது.)

44. அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் 1989–90ஆம்ஆண்டிற்கான பதினெட்டாவது ஆண்டு அறிக்கை. (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1956) 619ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

45. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் 1989–90 ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டு அறிக்கை. (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (தமிழ் ஆங்கிலம்).

46. இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின் 1989–90 ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டு அறிக்கை. (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

47. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் 1989–90 ஆம் ஆண்டிற்கான பதினெட்டாவது ஆண்டறிக்கை. (1956ஆம்ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

48. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1987–88ஆம் ஆண்டிற்கான அறிக்கை. (சிவில்). (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (ஆங்கிலம்).

49. தமிழ்நாடு அரசின் 1987–88 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் கணக்குகள் (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின், 151(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (ஆங்கிலம்)

50. தமிழ்நாடு அரசின் 1987—88 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள். (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (ஆங்கிலம்)

51. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1988—89ஆம் ஆண்டிற்கான அறிக்கை (வருவாய் வரவினங்கள்). (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

ஏதுமில்லை.